தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின் நாற்பத்தி ஏழாவது கூட்டத் தொடர்.

வியாழக்கிழமை, 1974 ஜனவரி 18.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கற் குறிப்பு.

தொழிலதிபரும், விஞ்ஞான மேதையுமான திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களே, 1974-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4-ஆம் நாள் தொழிலதிபரும், பல புதிய இயந்திரச் சாதனங்களைக் கண்டுபிடித்தவரும், விஞ்ஞான மேதையுமான திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் இயற்கை எய்திய செய்தியை இவ்வவைக்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் 1893-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ஆம் நாள் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். அவர் தம்முடைய உழைப்பினாலும், நுண்ணறிவினாலும் பல புதிய இயந்திரச் சாதனங்களைக் கண்டுபிடித்தார். விஞ்ஞானத்தில் அதிக நாட்டமுடையவராகவும், விஞ்ஞான சாதனங்களை மக்களுக்குக் குறைந்த விலையில் அளிக்க வேண்டுமென்ற பெரு நோக்கும் கொண்டிருந்தார். அதன் விளைவாக, குறைந்த விலையில் வானொலிப் பெட்டியை விற்பனைக்குக் கொண்டு வந்தார்.

அவர் உலக நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தார். தன்னுடைய கருத்துக்களை, எவ்வித எதிர்ப்புக்களுக்கும் பணியாமல், தைரியமாகச் சொல்லி வந்தார். நாட்டில் தொழில் முன்னேற்றத்திற்காக, மாணவர்களுக்காக பொறியியல் கல்லூரி ஒன்றினை நிறுவி, அதில் சீரிய முறையில் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வந்தார்.

அவரது மறைவு நம் நாட்டுக்கும், சிறப்பாக தமிழ் நாட்டுக்கும் ஒரு பெரிய இழப்பாகும். அவரை இழந்து நிற்கும் அவர்தம் குடும்பத்ினருக்கு, இம்மேலவையின் சார்பாக நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்

கின்றேன். அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக நிற்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

(அவையினர் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

3. இரங்கற் தீர்மானம்

பெரியார் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்களின் மறைவு குறித்து

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களே, தந்தை பெரியார் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் கடந்த டிசம்பர் திங்கள் 24-ஆம் நாள், இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை இரங்கல் தீர்மானத்தை முன்மொழியும்படி வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மேலவைத் தலைவர் அவர்களே,

"நமது தமிழகத்தின் ஒப்பற்ற தனிப் பெருந்தலைவரும், தந்தை பெரியார் என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பெற்றவரும், இந்திய நாட்டு விடுதலை இயக்கத்தின் தளபதிகளில் ஒருவரும், ஜாதியற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று பாடுபட்டவரும், சுயமரியாதை இயக்கத்தின் தந்தையும், சமூகத்தின் மூட நம்பிக்கைகளைக் களைய தன் வாழ்நாள் முழுவதும் பணியாற்றியவரும், தமிழ்ச் சமுதாயம் மேன்மையடைய வேண்டுமென்று தியாகம் பல செய்தவருமான பெரியார் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் மறைவு எய்தியமை குறித்து இம்மன்றம் தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுத்துயரையும் தெரிவிப்பதோடு பெரியார் மறைவால் வருந்தும் அவரது துணைவியார் மணியம்மையாருக்கும், குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது"

என்று முன்மொழிகிறேன்.

தலைவரவர்களே, தமிழகம் மட்டுமின்றி இந்திய நாடு முழுவதும், ஏன் கடல் கடந்து வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவரும் வேதனைப்படத்தக்க அளவுக்கு தந்தை பெரியார் அவர்கள் மறைந்து விட்டார்கள். இரங்கல் தீர்மானத்திலே குறிப்பிட்டிருப்பதைப் போல, தமிழ் சமுதாயத்தினுடைய விடிவெள்ளியாக பெரியார் அவர்கள் திகழ்ந்தார்கள். அவர்களுடைய பொதுப்பணி உழைப்பு,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS